செ. வெ. எண்.415 நாள். 17.7.2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் இன்று 17.7.2012 நெடுஞ்சாலைத்துறையின் சென்னை வட்டத்தில் உள்ள சென்னை, திருவள்ளுர், காஞ்சிபுரம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு, திட்டங்கள் அலகு, நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகு, தேசிய நெடுஞ்சாலைகள் அலகு மற்றும் சென்னை பெருநகர அலகு ஆகியவற்றில் தற்போது நடைபெற்றுவரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை வட்டத்தில், 2011–12ம் ஆண்டு ஒருங்கினைந்த சாலை கட்டமைப்பு மேம்பாடு திட்டத்தில் ரூ. 133 கோடி மதிப்பில் நடைபெற்றுவரும் நிலுவைப்பணிகள் குறித்தும், 2012–13ம் ஆண்டில் ரூ.490 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள 285 பணிகள் குறித்தும் ஆய்வு செய்தார். மேலும் சென்னை விமான நிலையம் அருகில் ரூ. 12 கோடி மதிப்பில் தே.நெ. 45 சாலையை அகலப்படுத்தும் பணியின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.

திருவள்ளுர் மாவட்டத்தில், திருவள்ளுர் மற்றும் திருத்தனி ஆகிய ஊர்களுக்கு புறவழிச்சாலை, வேலூர் மாநகராட்சிக்கு வெளிவட்டச்சாலை மற்றும் சி.எம்.சி மருத்துவமனை சந்திப்பில் மேம்பாலம் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி ஆகியவற்றை விரைந்து முடிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

வண்டலூர்–வாலாஜாபாத் சாலை (33.4 கி.மீ) மற்றும் சிங்கபெருமாள் கோவில் – ஸ்ரீபெரும்புதூர் சாலை (24 கி.மீ) மொத்தம் 57.4 கி.மீ சாலையினை 4 வழிச்சாலையாக ரூ. 462 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இவற்றுள் இதுவரை 40 கி.மீ சாலைப்பணி 290 கோடியில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைப்பணிகள் மற்றும் ஒரகடம் சாலை சந்திப்பில் நடைபெற்றுவரும் மேம்பாலப்பணியையும் விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்.

தேசிய நெடுஞ்சாலை அலகில் 90 கி.மீ நீளச்சாலை ரூ. 94 கோடியில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 1 பாலப்பணி ரூ.2.75 கோடியில் நடைபெற்றுவருகிறது.

திட்டங்கள் அலகில் இந்த நிதியாண்டில் 9 இரயில்வே மேம்பாலப்பணிகள் முடிவடையவுள்ளது. இப்பணிகளை குறிப்பிட்ட காலத்தில் முடிக்க கேட்டுக்கொண்டார்.

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டப் பணிகளில் 6 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 12 சாலைப்பணிகளும் 18 பாலப்பணிகளும் வெவ்வேறு நிலைகளில் நடைபெற்றுக்கொண்டிருப்பதை ஆய்வு மேற்கொண்டார். புதிய அறிவிப்புகளின் 14 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக ஒப்பந்தங்கள் கோரப்பட்டிருப்பதை விரிவாக ஆய்வு செய்தார்.

நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகின் மூலமாக 4 இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் மற்றும் 19 ஆற்றுப்பாலங்கள் ரூ. 129 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டதில் ரூ 11 கோடி மதிப்பில் 6 ஆற்றுப்பாலங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பாலப்பணிகளை துரிதமாக முடிக்க அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

தரஉறுதி மற்றும் ஆராய்ச்சி அலகின் மூலம் மேற்கொள்ளப்படும் ஆய்வு பணிகள் குறித்து கேட்டறிந்து பணிகளை தரமாக செய்வதை கண்காணித்து உறுதிசெய்யுமாறு அறிவுறுத்தினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணைக்கினங்க சாலைகளை சிறந்த தரத்துடன் அமைக்க வேண்டும் என்றும் சாலைப்பணிகள் நடைபெறும்போது உரிய அதிகாரிகளால் கண்காணிக்கப் படவேண்டும் என்றும், சாலைகளில் சிறு பள்ளங்கள் ஏற்பட்டால் உடன் நொடிகள் (Patches) போடப்பட்டு சீரிய முறையில் பராமரிக்கப்படவேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

தற்போது நடைபெற்றுவரும் சாலைப்பணி மற்றும் ஆற்றுப்பாலங்கள், ரயில்வே மேம்பாலங்கள், சுற்றுச்சாலை, வட்டச்சாலை மற்றும் புறவழிச்சாலை ஆகிய பணிகளை துரிதப்படுத்தி சிறந்த முறையில் செய்யப்படவேண்டும் என்றும், புறவழிச்சாலை மற்றும் பாலப் பணிகளுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகளை காலதாமதமின்றி விரைந்து செயல்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**